## தலைப்பு 121 – உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

--------------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும்

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்ட நிதிசெயலாற்றல் கூற்றில் கீழேயுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த மதிப்பீட்டுக்கு அமைவாக அடிப்படை வருமான மதிப்பீடு ரூபா 190,000,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் வருமான கூற்றில் அடிப்படை மதிப்பீடு ரூபா 183,696,500 ஆக காட்டப்பட்டிருந்தது. | வரவு செலவு மதிப்பீட்டு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அடிப்படை மதிப்பீடாக கொள்ள வேண்டியமை | அவதானிப்புக்களுடன் இணங்க முடியாது. மாவட்ட செயலகங்களால் பெற்றுத் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 183,696,500 ஆயினும், வரவு செலவு திணைக்களத்தினால் முன்வைத்துள்ள மதிப்பீட்டின் முழுப் பெறுமதி ரூபா 190,000,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ரூபா 190,000,000 ஆன மதிப்பீட்டுப் பெறுமதி வரவு |

| | | | |
|---|---|---|---|
| | | | செலவுத் திணைக்களத்தின் பெறுமதி என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் கடைசித் தினத்தில் சேவையிலிருந்து விலகிச் சென்ற இறந்துபோன, ஓய்வு பெற்ற, சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் ஏனைய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,101,266 நிலுவைக் கடன்களில் 05 வருடங்கள் தாண்டிய நிலுவைத் தொகை ரூபா 493,140 ஆகும். | கடன் நிலுவைகளை அறவிடுவதற்கன நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவைகள் 04 மாவட்ட செயலகங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதுடன் அவைகளிடமிருந்து பதில் வந்ததும் உங்களிடம் முன்வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 இலக்கம் கொண்ட அரச நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 03 உத்தியோகத்தர்களுக்கு இடர்க்கடன் கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டிய மிகுதிப் பணம் ரூபா 877,523 ஆகும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செயல்பட்டுள்ள உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக இடர்க்கடன் பெற்றுக்கொடுப்பதற்கு செயல்பட்டுள்ள 03 மாவட்ட செயலகங்களிலிருந்து பதில் வந்ததும் முன்வைக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றில் கீழேயுள்ள கணக்கியல் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 5,719,811 ஆன வைப்புக் கணக்குகளின் வேறுபாடுகள் செயல்பாட்டு நடவடிக்கையிலிருந்து உருவான பணமாக காசுவீச்சில் உட்படுத்தப்படாது நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான பணமாக காசுவீச்சில் காட்டப்பட்டுள்ளது. | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வருவான காசு வீச்சில் வைப்புப் பெறுவனவுகளும் செலுத்துதல்களும் உள்ளடக்கப்பட வேண்டியமை. | அரச கணக்கியல் திணைக்களத்தினால் 2018 நவம்பர் 21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 267/2018 சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டில் முதலீட்டு செயல்பாடுகளின் கீழ் உள்ள 06 விடயங்களின் மொத்தத் தொகையான ரூபா 48,263,064 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பிழையின்றி கணக்கிற்குட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | குறுக்குக் குறிப்புக்கள் மூலமாக செய்யப்படும் நிதியல்லாத கொடுக்கல் வாங்கல்களை தவிர்த்து பணத்தாலான பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளுதல் வேறுபாட்டுக்கு காரணமாக உள்ளது. |
| (இ) நடவடிக்கை செயற்பாடுகளின் கீழ் உருவான 06 காசுவீச்சில் விடயங்களின் முழுத்தொகை ரூபா 54,236,487 க்கு குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பிழையின்றி கணக்கிற்குட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை | குறுக்குக் குறிப்பாக்கல் மூலம் செய்யப்படும் நிதியல்லாத கொடுக்கல் வாங்கல்களை தவிர்த்து பணத்தாலான பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளுதல் வேறுபாட்டுக்கு காரணமாகும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழேயுள்ள சில பதிவேடுகள் பேணப்படாது இருந்தமை மாதிரிக் கணக்காய்வு ஆராய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிணைப் பதிவேடு | | |
| பிணை வைக்கக்கூடிய உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் தகவல்கள் உள்ளடங்கிய பிணை பதிவேடொன்று பேணப்படாதிருந்தது. | நிதிப் பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை பதிவேடொன்று பேணப்படுதல். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். அமைச்சின் சகல உத்தியோகத்தர்களுக்கும் 07/2019 இலக்கமுடைய சுற்று நிருபம் வழங்கப்பட்டு பிணைப் பணம் வைப்பு சம்பந்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் வடிவமைக்கப்பட்ட படிவத்தின்படி இழப்பீடுகள் தொடர்பான பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்ட வகையில் பராமரிக்கப்படவில்லை. | வடிவமைக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டியமை. | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். வடிவமைக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் நாளது வரையாக்கப்பட்ட வகையில் பராமரிப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். |

## 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு ஆராய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்ட மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | | |
| அத்தியாயம் viii பிரிவு 10 | அமைச்சுக்குக் கீழ் செயல்படும் நிறுவனங்களில் இறுதிக் கணக்கினை சரி செய்யும் அலுவலகர் மற்றும் அபிவிருத்தி வேலைகளில் பங்கேற்கும் பதவிசார் உத்தியோகத்தர் அல்லாத ஏனைய உத்தியோகத்தர்களுக்கு திணைக்கள தலைவரின் தனிப்பட்ட பரிந்துரைகளுக்கமைவாக 1/20 கொடுப்பனவொன்று வழங்குவதற்கு அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் அதற்கமைய 08 மாவட்ட செயலகங்களில் ரூபா 1,634,326 வழங்கப்பட்டிருந்தன. | தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கு அமைய செயல்பட வேண்டியமை. | பதவிசாரா உத்தியோகத்தர் களிடமிருந்து விடுமுறை நாட்களில் பெற்றுக்கொள்ளப்படும் கடமைக்காக கொடுப்பனவு செலுத்தாது சேவை பெற்றுக் கொள்வது இயலாத காரியம் என்பது எனது நம்பிக்கையாகும். |

| | | | |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>---------------------------------- | | | |
| நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | 07 விபத்துக்கள் சம்பந்தமான ஆரம்பகட்ட பரீட்சை நடாத்துவதற்கு 07 நாட்கள் முதற்கொண்டு 06 மாத காலம் தாமதித்திருந்ததுடன் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 04 மாதம் முதல் ஒரு வருட காலம் வரை தாமதமாகி உள்ளது. | நிதிப்பிரமாணங் களுக்கு அமைய செயல்பட வேண்டியமை | அவதானிப்பை ஏற்றுக் கொள்ளுகின்றேன். எதிர்காலத்தில் இதனை திருத்திக் கொள்வதற்கான ஆலோசனை உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன். |
| நிதிப்பிரமாணம் 104(2) | காணாமற் போதல் நட்டப்படுதல் பெறுமதி ரூபா 50,000 இற்கு அதிகமாக இருப்பின் அவ்வறிக்கையின் பிரதியொன்று திறைசேரிக்கு அனுப்ப வேண்டியுள்ள போதிலும், முழுத்தொகை ரூபா 6,843,433 ஆன 06 விபத்துக்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மேற்படி | அவதானிப்பை ஏற்றுக் கொள்ளுகின்றேன். அவ்விபத்துக்கள் சம்பந்தமான நிதிப்பிரமாணம் 104(4) கீழான இறுதிப் பரீட்சை முடிக்கப்படாது இருப்பதுடன் நட்ட ஈட்டுப் பணத்தை மதிப்பீடு செய்யப்பட்ட உடன் திறைசேரி செயலாளரிடம் அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| அரச நிருவாக சுற்று நிருபம்<br>---------------------------------<br>2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்கமுடைய சுற்று நிருபம் | அமைச்சினுள் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று உருவாக்க வேண்டியுள்ள போதும் அவ்வாறு செய்யப்படவில்லை. | சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைய செயல்பட வேண்டியமை. | அவதானிப்பை ஏற்றுக் கொள்ளுகின்றேன். 2019 வருடத்திற்கான அமைச்சின் பயிற்சி திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 வருமான முகாமைத்துவம்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருமான அடையாள இலக்கம் 10.03.07.99 ஆன தொகை ரூபா 190 மில்லியன் என வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 227.9 மில்லியன் ஆகும். | வருடாந்த வருமானம் பிழையின்றி தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்ளுகின்றேன். மாவட்ட செயலகம் மற்றும் ஆகியவற்றின் மூலமாக சேவை பெறுநர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ், அனுமதிப்பத்திரங்களின் பிரதிகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களின் அடிப்படையில் வருமானம் தயாரிக்கப்படுவதுடன் இவ்வருமானம் சேவை பெறும் தேவைக்கேற்ப அதன் அடிப்படையில் கணக்கிடப்படுவதனால் பிழையின்றி முன்கூறல் கடினமாகும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டமை<br>---<br>13 மூலதன விடயங்கள் சம்பந்தமான மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா 11,228.4 மில்லியன் ஆக இருந்ததுடன் இறுதி ஆண்டில் மொத்த செலவு ரூபா 9,102.7 மில்லியன் ஆக இருந்தது. மிகுதி மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவீதத்திலிருந்து 89 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக ஆகி இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் பிழையற்ற செலவு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக்கொள்ளுகின்றேன். |
| (ஆ) | 14 மீண்டெழும் செலவு விடயங்கள் சம்பந்தமாக மொத்த தேசிய ஒதுக்கீடு ரூபா 140.02 மில்லியன் ஆக இருந்ததுடன் வருட இறுதியில் மொத்த செலவு ரூபா 99.9 மில்லியன் ஆயிற்று மிகுதி மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவீதத்திலிருந்து 99 சதவீத வீச்சுக்கு இடைப்பட்டதாக ஆகியிருந்தது. | -மேற்படி- | அவதானிப்பை ஏற்றுக்கொள்ளுகின்றேன். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் இணக்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 05 செலவு விடயங்களின் மிகுதியை கடந்து ரூபா 114,164 க்கான பொறுப்புக்களுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 216(அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | மேலதிக நேரத்திற்காக திசெம்பர் மாதத்திற்கான செயல்முறையான சரியாக கணக்கிட்டு பார்ப்பதற்கு முடியாது போனமை ஒதுக்கீடு தாண்டுவதற்கான காரணமாகும். |
| (ஆ) நிதிக்கூற்றுக்களின் அறிவிக்கப்படாத ரூபா 349,690 க்கான பொறுப்புக்கள் மீளாய்வாண்டில் தீர்வு காணப்பட்டுள்ளது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்கமுள்ள அரச கணக்கு சுற்று நிருபத்தின் 3.4 பிரிவுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியமை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. பிழையின்றி முன்வைக்கப்படாமையினால் இணக்கங்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கைகளில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 முற்பணம் வழங்குதல் மற்றும் சரி செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) அமைவாக வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட கருத்திற்கான | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு | அவதானிப்பை ஏற்றுக் கொள்ளுகின்றேன். எதிர்காலத்தில் புறம்பாக |

| | | |
|---|---|---|
| இடைக்கால பணம் காரியம் முடிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் சரிப்படுத்த வேண்டினும் வழங்கப்பட்டிருந்த தொகையான ரூபா 2,405,151 சம்பந்தப்பட்ட கருத்திற்கான அப்பணம் 03 நாட்கள் முதல் 179 நாட்கள் வரையிலான கால தாமதத்திற்குப் பின் சரிப்படுத்தப்பட்டிருந்தது. | அமைவாக செயல்பட வேண்டியமை. | செயல்படும் உத்தியோகத்தர்களுக்கு சம்பந்தப்பட்ட காலஎல்லைகளுள் அறவிடப்படாத முற்பணத்தை அவர்களினது சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலா பங்களாக்களின் எண்ணிக்கையை குறிப்பிடாது ரூபா 50 மில்லியன் ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அதில் ரூபா 8.9 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டு 12 சுற்றுலா பங்களாக்கள் மேன்படுத்தப்பட்டிருந்தன. | திட்டமிடப்படி செயல்பட வேண்டியமை | திருத்த வேலைகளுக்காக கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த சுற்றுலா மனைகளுக்காக மாத்திரம் 2018 ஆம் வருடத்தில் ரூபா 8.9 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) பணிக்குழாம் பயிற்சிக்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 21 மில்லியனுக்கு செலவு | திட்டமிடப்படி செயல்பட வேண்டியமை | அவதானிப்பை ஏற்றுக்கொள்ளுகின்றேன். உள்நாட்டு பிரிவின் சகல உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்பட்டு பயிற்சி |

| | | |
|---|---|---|
| செய்து 35 பயிற்சித் திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு 42 சதவீத இலக்கை அடையப்பட்டிருந்தது. | | திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டதுடன் பற்பல காரணங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட எல்லா செயற்திட்டங்களையும் நடாத்த இயலாது போயிற்று. |

### 3.2 செயல்திட்டங்களை முடிப்பதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட செயலக கட்டிட தொகுதியின் III ஆம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக 2016 யூன் 30 ஆந் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டதுடன் 1,095 நாட்களுக்குள் நிர்மாணப் பணிகள் முடிக்க வேண்டி இருந்தன. நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தி 2017 திசெம்பர் 20 ஆந் திகதி பணிகளை முடிப்பதற்கான 2017 மார்ச் 28 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெறப்பட்டிருந்தது. ஆயினும் 2019 மே மாதமாகியும் நிர்மாண வேலைகள் முடிக்கப்படவில்லை விடயங்கள் அப்படியாயினும், 2018 வருட கட்டிட வாடகை ரூபா 29.55 மில்லியன் கொடுக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்திற்கு ஏற்ப செயல்பட வேண்டியமை | அபிவிருத்தி பிரிவின் பதில் கிடைத்ததும் கையளிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

## 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 111 மின் உற்பத்தி இயந்திரங்கள் ரூபா 4,995,000 கொள்வனவு செய்யப்பட்டு 95 இயந்திரங்கள் 11 பிரதேச செயலகங்களுக்கு 04 ஏனைய நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. ஆயினும், அனர்த்த முகாமைத்துவத்தின் மத்திய நிலையத்தில் உள்ள 16 இயந்திரங்களும் கொள்வனவு செய்த நாள் முதல் எவ்வித பிரயோசனமும் இன்றி வைக்கப்பட்டுள்ளன. | வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் பெறப்படும் பணம் பொருளாதார மேம்பாட்டுடன் வினைத்திறனுடன் மற்றும் உற்பத்தி திறனுடனும் பயன்படுத்தப்படல் வேண்டியமை | 111 மின் உற்பத்தி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதில் ஒரு தொகுதிக்கு தலா 09 மின் உற்பத்தி இயந்திரங்கள் வீதம் 11 பிரதேச செயலக காரியாலங்களுக்கு பகிர்ந்தளிக்கவும் மிகுதி 12 மாவட்டத்தில் ஏற்படும் திடீர் அனர்த்தங்களின் போது பாவனை செய்வதற்கு மாவட்ட செயலக காரியாலய களஞ்சியத்தில் வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. |
| (ஆ) கேகாலை மாவட்ட செயலகத்திற்கு கொடுக்கப்பட்டிருந்த ரூபா 1,044,423 ஆன உதவிப்பணம் பயன்படுத்தப்படாது திரும்பவும் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | கே/தெகி/வெலன்கல்ல கனிஷ்ட வித்தியாலய பூமியில் திடீரென ஏற்படக்கூடிய அனர்த்தத்தின் போது பயன்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் மற்றும் மலசலகூட தொகுதியை நிர்மாணிப்பது சம்பந்தமாக ரூபா 05 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1.04 மில்லியன் மிகுதியாக உள்ளது. |

## 3.4. நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 22 வாகன விபத்துக்கள் மற்றும் 2018 வருடம் நடந்த 04 வாகன விபத்துக்கள் சம்பந்தமான தகவல்கள் நிதிக்கூற்றில் காண்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணங் களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அவதானிப்பை ஏற்றுக்கொள்ளுகின்றேன். 2015, 2017 மற்றும் 2018 வருடங்களில் நடந்த வாகன விபத்துக்களில் ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்யப்பட வேண்டிய 03 விபத்துக்கள் இருப்பதுடன் அவ்விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாண 109 படிவங்கள் அதனுடன் சேர்க்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகின்றேன் |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) விபத்துக்குள்ளான வாகனங்களை திருத்திய 03 சந்தர்ப்பங்களின் போது காப்புறுதி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படும் தொகைக்கு உட்பட்டதாக என திருத்த வேலை செய்யும் நிறுவனத்திற்கு ஒரு நிபந்தனை விதிப்பதன் மூலம் பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) மற்றும் 1.2.1(இ) ஏற்பாடுகளுக்கு இணங்காமை அவதானிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அமைவாக செயல்பட வேண்டியமை | ஏற்றுக்கொள்ளுகின்றேன். சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) 1951 இன் 14 ஆம் இலக்கத்தை உடைய மோட்டார் வாகன சட்ட அதிகாரத்தின் 151(2) மற்றும் 151(3) பிரிவுக்கு அமைவாக கவனக்குறைவாகவும் அதிக வேகமாகவும் வாகனம் செலுத்தப்படலாகாது என்பதை வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2 சந்தர்ப்பங்களில் சாரதியால் அவ்வாறு நடந்து கொள்ளாமையினால் ரூபா 4,849,189 இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய செயல்பட வேண்டியமை | ஏற்றுக்கொள்ளுகின்றேன். எதிர்காலத்தில் மேற்படி சம்பவங்களை ஏற்படாத வண்ணம் சாரதிகளுக்கு ஆலோசனை வழங்கப்படும். |

## 4. நிரந்தர அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்ளுதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிரந்தர அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 வருட நிகழ்ச்சி நிரல் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயல்பட வேண்டி உள்ளமையால் அமைச்சினால் தமது விடயங்களின் கீழ் உள்ள அலுவல்கள் தொடர்பாக செயல்பட்ட விதம் குறித்து தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 வருட நிகழ்ச்சி நிரல் பிரகாரம் செயல்பட வேண்டியமை. | மாவட்ட நிருவாக பிரிவிலிருந்து பதில் வந்ததுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 389 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஆனணயினர் 314 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 83 என்பதுடன் இரண்டாம் நிலை அலுவலர்கள் 8 பேர் மேலதிகமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் மேலதிக எண்ணிக்கையை தேவைக்கு ஏற்றபடி கவனம் செலுத்தி பணிக்குழாமில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்ளுகின்றேன். |